# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்

## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)

## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 26.04.2013 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தசஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் சூரா அந்நிஸாவின் 36வது வசனத்தையும், சூரா அல் ஹிஜ்ரின் 9, 10 வது வசனத்தையும் ஓதினார்கள்:**

يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُوا كُونُوا قَوَّٰمِينَ بِٱلْقِسْطِ شُهَدَآءَ لِلَّهِ وَلَوْ عَلَىٰٓ أَنفُسِكُمْ أَوِ
ٱلْوَٰلِدَيْنِ وَٱلْأَقْرَبِينَ ۚ إِن يَكُنْ غَنِيًّا أَوْ فَقِيرًا فَٱللَّهُ أَوْلَىٰ بِهِمَا ۖ فَلَا تَتَّبِعُوا
ٱلْهَوَىٰٓ أَن تَعْدِلُوا ۚ وَإِن تَلْوُۥٓا أَوْ تُعْرِضُوا فَإِنَّ ٱللَّهَ كَانَ بِمَا تَعْمَلُونَ خَبِيرًا ۝

*பொருள் : நம்பிக்கையாளர்களே! நீங்கள் நீதியை நிலைநாட்டுவதில் நிலைத்திருங்கள். உங்கள் சாட்சியம் உங்களுக்கோ உங்கள் பெற்றோருக்கோ, நெருங்கிய உறவினர்களுக்கோ எதிராக இருப்பினும், அல்லாஹ்வுக்காக சாட்சி கூறுபவர்களாயிருங்கள். (யாருக்காக சாட்சி கூறப்பட்டதோ) அவர் செல்வந்தராயினும், ஏழையாயினும் சரி அல்லாஹ் அவ்விருவருக்கும் (உங்களை விட) அதிக அளவில் நன்மையை விரும்பக்கூடியவனாவான். நீங்கள் நேர்மையுடன் செயல்படும் பொருட்டு, அற்ப ஆசைகளைப் பின்பற்றாதீர்கள். நீங்கள் (உண்மையை) மறைத்தாலோ, தட்டிக் கழித்தாலோ நீங்கள் செய்வதை அல்லாஹ் நன்கு அறிகிறான் (என்பதை நினைவில் கொள்ளுங்கள்). (4:136)*

يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُوا كُونُوا قَوَّٰمِينَ لِلَّهِ شُهَدَآءَ بِٱلْقِسْطِ ۖ وَلَا يَجْرِمَنَّكُمْ شَنَـَٔانُ قَوْمٍ عَلَىٰٓ
أَلَّا تَعْدِلُوا ۚ ٱعْدِلُوا هُوَ أَقْرَبُ لِلتَّقْوَىٰ ۖ وَٱتَّقُوا ٱللَّهَ ۚ إِنَّ ٱللَّهَ خَبِيرٌۢ بِمَا تَعْمَلُونَ ۝

*பொருள்: நம்பிக்கை கொண்டவர்களே! அல்லாஹ்வுக்காக நீங்கள் நேர்மையான சாட்சி கூறுபவர்களாக நிலைத்து நில்லுங்கள. ஒரு சமுதாயத்தின் பகைமை உங்களை நீதியுடன் நடக்காதவாறு தூண்டா வேண்டாம். நீங்கள் நீதியுடன் நடந்து கொள்ளுங்கள். இதுதான் இறையச்சத்திற்கு மிக நெருங்கியது. அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை நன்கு அறிகிறான். (5:9)*

وَعَدَ ٱللَّهُ ٱلَّذِينَ ءَامَنُوا وَعَمِلُوا ٱلصَّٰلِحَٰتِ ۙ لَهُم مَّغْفِرَةٌ وَأَجْرٌ عَظِيمٌ ۝

*நம்பிக்கை கொண்டு, நற்செயல்கள் செய்கிறவர்களுக்கு, மன்னிப்பும் மகத்தான நற்பலனும் (விதிக்கப்பட்டு) உள்ளனவென்று அல்லாஹ் அவர்களிடம் வாக்குறுதி அளித்துள்ளான். (5:10)*

இஸ்லாத்தின் எதிரிகள் அவ்வப்போது இஸ்லாம் மற்றும் முஸ்லிம்களின் மீது தீவிரவாதம், காழ்ப்புணர்ச்சி மற்றும் பகைமை ஆகியவை முஸ்லிம்களின் உள்ளத்தில் உள்ளது என்று குற்றம் சுமத்தி வருகின்றனர். உலகில் நிகழ்கின்ற தீவிரவாத நிகழ்ச்சிகள் முஸ்லிம் என்று தம்மைக் கூறுபவர்கள் அதை செய்தாலும் அல்லது வேறு எவர் செய்தாலும், அல்லது சில பெயர் தாங்கிய இஸ்லாமிய அமைப்புகளாகிய ஜிஹாத் பிரிவினர் செய்தாலும் அந்த தீவிரவாத செயல்களை இஸ்லாமிய போதனைகள் என்று சுட்டிக் காட்டப்படுகின்றன. பிறகு திருக்குர்ஆன் மற்றும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தீய சொற்களுக்கு இலக்காக்கப்படுகின்றனர்.

இன்று அல்லாஹ்வின் அருளால் இக்காலத்தின் இமாம் மற்றும் ரஸூல் (ஸல்) அவர்களின் உண்மை நேசரின் ஜமாஅத் இஸ்லாத்தின் எதிரிகளின் ஒவ்வொரு ஆட்சேபனைக்கும் திருக்குர்ஆனின் போதனைகளின் ஒளியில் பதில் கூறி வருகிறது. மேலும் ஒவ்வொரு தீய குற்றச்சாட்டுக்கும் பதில் கூறி இஸ்லாத்தின் எதிரிகளுக்கு அவற்றின் கண்ணாடியைக் காட்டுகிறது.

தீவிரவாதத்திற்கு எதிரான பல்வேறு வசனங்கள் உள்ளன. அவற்றில் நான் ஓதிய வசனங்களும் எடுத்துக் கூறப்படுகின்றன. இஸ்லாத்தின் நீதியை விரும்பும் போதனை மற்றும் உயரிய போதனை என்ன என்பது எடுத்துக் கூறப்படுகிறது. இந்த போதனையானது நீதியை விரும்பும் முஸ்லிம் அல்லாதவர்கள் கூட இதைக் கேட்டு இந்த போதனையைப் போற்றாமல் இருக்க முடியாது. அத்துடன் இந்த போதனையின்படி செயல் எங்கே உள்ளது? என்ற கேள்வியையும் எழுப்புகின்றனர். ஜமாஅத் மக்களுடன் தொடர்புடைய முஸ்லிம் அல்லாதவர்கள் நன்கு அறிவர். அவர்கள் இதைக் கூறவும் செய்கின்றனர். அதாவது உங்களுடைய ஜமாஅத்தின் நபர்களிடம் இந்த போதனையின் பொலிவு தென்படுகிறது. ஆனால் நீங்கள் முஸ்லிம்களுள் மிகவும் குறைந்த எண்ணிக்கையைக் கொண்ட ஜமாஅத் ஆவீர்கள். இஸ்லாத்தின் பொதுவான தோற்றத்தை நாங்கள் பிற முஸ்லிம் பிரிவுகளில் பார்த்து விட்டோம் என்கின்றனர். இவர்களோடு பழகும் நமது ஜமாஅத்தைச் சேர்ந்தவர்கள் தத்தமது அறிவின் அடிப்படையில் இவர்களுக்கு பதில் கூறி விடுகின்றனர். பொதுவாக அந்நியர்கள் இதைக் கேட்டு நல்ல தாக்கத்திற்கு ஆளாகின்றனர். ஆனால் நாம் உண்மையை நேசிப்பவர்களாக இருப்பதும் அவசியமாகும். நாம் நம்மையே ஆய்வு செய்வதும் அவசியமாகும்.

திருக்குர்ஆனின் போதனையின்படியும் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் முன்மாதிரியின் படியும் எதிரிகளுக்கு திருப்தியான பதிலை வழங்க முயற்சி செய்கிறோம். இதில் நாம் ஓரளவு வெற்றியும் அடைகிறோம். இதன் காரணமாகவே உலகின் பல்வேறு பத்திரிகைகள் இஸ்லாத்தைப் பற்றி எழுதும் போதெல்லாம் சில நேரம் பெயரைக் குறிப்பிட்டும் சில நேரம் பெயரைக் குறிப்பிடாமல் சைகையாகவும் கூறும்போது இஸ்லாத்தில் குறைந்த எண்ணிக்கையைக் கொண்ட ஒரு ஜமாஅத் உள்ளது. அது இந்த தீவிரவாதத்திற்கு எதிராக உள்ளது என்று எழுதுகின்றனர். மேலும் இந்த ஜமாஅத் உலகில் நீதியை நிலைநாட்ட விரும்புகிறது. இஸ்லாத்தின் உண்மையான போதனையின்படி செயல்படுபவர்கள் தாம் தான் என்று இது வாதம் புரிகிறது என்றும் எழுதுகின்றனர்.

அந்நியர்கள் ஜமாஅத்தைப் பற்றி இவ்வாறு கூறும் கருத்துக்களை நான் கேட்கும் போதும், முஸ்லிம் அல்லாதவர்களுக்கு முன்னால் இஸ்லாத்தின் அழகிய போதனையை நான் எடுத்துக் கூறும் போதும் எனக்கு ஒரு கவலை ஏற்படுவதுடன் இதன் பக்கம் கவனமும் ஏற்படுகிறது. அதாவது நாம் எந்த அளவுக்கு இந்தப் போதனையின்படி செயல்படுகிறோம் என்று நாம் நம்மை ஆய்வு செய்ய வேண்டியது அவசியமாகும். உலகிற்கு முன்னால் நாம் இந்த அழகிய போதனையை எடுத்து வைத்து ஆட்சேபனை செய்பவர்களின் வாயை மட்டும் தற்காலிகமாக அடைக்கிறோமா? இதுவே போதும் என்று கருதுகிறோமா? நேரம் வரும் போது உலகம் நம்மை ஆராயும் போது இந்த அழகிய போதனையின் உயரிய தரம் நம்மிடம் இல்லாத நிலை உள்ளதா?

எந்தவொரு ஜமாஅத்தின் உண்மைத்தன்மையும் தன் மீது இக்கட்டை ஏற்படுத்தும் நிலை வரும் போது நம்மில் ஒவ்வொருவரும் நம்மை நாமே கஷ்டத்தில் ஆழ்த்திக் கொண்டு இறைவனின் திருப்திக்காக அதன் போதனையின் படியும் அதன் கட்டளைகளின் படியும் செயல்படுபவர்களாக இருக்கும் போதுதான் தெரிய வரும். அப்போது செயல்படும் போது அந்த இக்கட்டான சூழ்நிலையிலிருந்து வெற்றி பெற்று வெளியேற வேண்டும். அப்போது தான் அந்த ஜமாஅத்தின் உண்மைத்தன்மை தெரிய வரும். இல்லையென்றால், போதனையின் அழகை வெளிப்படுத்துவதும் அதன்படி செயல்படாமல் இருப்பதும் எந்தவொரு ஜமாஅத்தையும் அழகாக்கி விடாது. அஹ்மதி அல்லாத பல முஸ்லிம்கள் அந்நியர்களுக்கு முன் இந்த அழகிய போதனையை எடுத்து வைத்திருப்பார்கள். ஆனால் அவர்கள் இந்த போதனையை இஸ்லாத்தின் அழகிற்கான ஆதாரமாக எடுத்து வைப்பது அவர்களை தனி நபர் என்ற அடிப்படையில் அந்நியர்களின் பார்வையில் நல்ல மனிதர்கள் என்ற சிந்தனையை வேண்டுமானால் ஏற்படுத்தலாம். அவர் அந்நியருடன் கொண்டுள்ள தொடர்பின் காரணமாகவோ அல்லது அவரது நல்லொழுக்கத்தின் காரணமாகவோ மார்க்கத்தின் மீது ஆட்சேபனை செய்வதிலிருந்து அவர்கள் விலகலாம். ஆனால் ஓர் அஹ்மதி, இதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். அதாவது ஓர் அஹ்மதி இஸ்லாத்தின் அழகிய போதனையை உலகின் முன் எடுத்து வைக்கும் போது அத்துடன் அவர் தன்னை ஓர்

அஹ்மதி முஸ்லிம் என்று அறிமுகப்படுத்துகிறார். அதாவது அவர் தம்மை இக்காலத்தில் இஸ்லாத்தின் மறுமலர்ச்சிக்காக தோன்றியுள்ளதாக தம்மை வாதம் புரிந்தவரைப் பின்பற்றுபவர் என்று அறிமுகப்படுத்துகிறார். இஸ்லாத்தின் அழகிய போதனையை உலகிற்கு எடுத்துரைக்க வந்த வாக்களிக்கப்பட்ட மஸீஹை நாங்கள் ஏற்றுக் கொள்பவர்களாவோம். அவர் ஒரு ஜமாஅத்தை நிறுவியுள்ளார் என்று கூறுகிறோம். இஸ்லாத்தின் அழகிய போதனையை எடுத்துக்கூறும் ஓர் அஹ்மதியின் கூற்று தனிப்பட்ட அந்த அஹ்மதியை மட்டும் புகழுக்குரியவராக ஆக்குவதில்லை. மாறாக, அமைதியை விரும்பக்கூடிய, நீதியில் நிலைத்திருக்கக்கூடிய, சத்தியத்தை எடுத்துக்கூறக்கூடிய இஸ்லாத்தின் உண்மையான போதனைகளின்படி செயல்படக்கூடிய ஒரு ஜமாஅத்தின் தோற்றம் அந்நியர்களுக்கு மத்தியில் விரிகிறது. அவ்வாறு ஏற்படவும் வேண்டும். அஹ்மதிகளின் கூற்றுக்களுக்கும் செயல்களுக்கும் மத்தியில் யாராவது முரண்பாட்டைக் கண்டால் அவர் இன்ன நபர் கூறுவது ஒன்றும் செய்வது வேறொன்றும் ஆகும் என்று சொல்ல மாட்டார். அல்லது இன்ன நபரிடம் உண்மையில்லை என்று சொல்ல மாட்டார். அல்லது இன்ன நபர் நீதியின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யவில்லை என்று சொல்ல மாட்டார். மாறாக, உடனடியாக பாருங்கள்! இன்ன நபர் அஹ்மதி ஆவார். இவர்கள் நன்மையைப் பற்றி பெரிய வாதம் புரிகின்றனர். இந்த ஜமாஅத் இக்காலத்தில் தன்னை நீதியை நிலைநாட்டுபவர்கள் என்று கூறுகிறது. ஆனால் இதில் இணைந்துள்ள மக்கள் இவ்வாறு அநீதியில் ஈடுபடுகிறார்கள் என்று கூறுவார்.

ஜமாஅத்தைச் சேராதவர்கள் பலர் அஹ்மதிகளுடன் சேர்ந்து வியாபாரம் செய்கின்றனர். அவர்களுக்குள் வியாபார விவகாரங்கள் ஏற்படும் போது வழக்குகள் தொடரப்படுகின்றன. அப்போது இன்ன நபர் அஹ்மதி ஆவார். எனவே நான் அவரை நம்பினேன். ஆனால் இப்போது இன்னின்ன பிரச்சனைகள் எங்களுக்கு ஏற்பட்டுள்ளன என்று எழுதுகின்றனர். நீதியுடன் அவர் சாட்சி சொல்லவில்லை. நிதியுடன் அவர் எனக்கு தர வேண்டிய உரிமையைத் தர மறுக்கிறார் என்று புகார் எழுகிறது.

எனவே ஓர் அஹ்மதி தன் செயலால் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மதிப்பைக் கெடுக்கிறார். ஒரு தவறான எண்ணத்தை உருவாக்கி ஜமாஅத்தின் பெயரைக் கெடுக்க காரணமாக அமைகிறார். இதனால் அவர் இன்னும் அதிகமான பாவம் செய்தவராகி விடுகின்றார். அதாவது நன்மை புரிவதற்கான வாதம் செய்து விட்டு செயல் வேறுவிதமாக உள்ளது.

இந்தக் கவலை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கும் இருந்தது. இதன் காரணமாக அவர்கள், எம்மைச் சார்ந்தவர்களாக இருந்து கொண்டு எமது பெயரைக் கெடுக்காதீர்கள் என்று கூறினார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது கூற்றின் சுருக்கத்தை நான் கூறியுள்ளேன். எந்தவொரு அஹ்மதியும் எந்த நிலையிலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மற்றும் அவர்களது ஜமாஅத்தின் பெயரைக் கெடுக்கும் எந்த செயலையும் செய்யக் கூடாது. இந்த வசனங்களில் கூறப்பட்டுள்ள கருத்துக்களின் படி எல்லா நிலையிலும் வழி நடப்பது அவசியமாகும். அப்போதுதான் இவை நமது இயல்பின் அம்சமாக மாறி தீமையிலிருந்து தடுப்பவர்களாக நம்மை ஆக்கும். நமது செயல்கள் எவ்வாறு இருக்க வேண்டும் என்பது குறித்து எல்லா நிலையிலும் நமது கவனம் இருக்கும். அப்போது நாம் எந்தவித தவறான செயலையும், நீதிக்குப் புறம்பான காரியத்தையும் உண்மைக்குப் புறம்பான காரியத்தையும் செய்யவோ அல்லது பிறருக்கு இழப்பை ஏற்படுத்த வேண்டும் என்பதற்கான சிந்தனை மனிதனின் உள்ளத்தில் ஒருபோதும் உருவாகவே முடியாது. இந்த வசனங்களின்படி சரியாக வழிநடந்தால் இது நமது இயல்பின் அங்கமாக ஆகி விட்டால் இந்த தீய செயல்கள் நம்மிடம் ஏற்படாது. அல்லாஹ்வின் அழகிய போதனை மற்றும் இஸ்லாத்தின் அழகிய வடிவம் ஆகியவற்றின் சரியான வெளிப்பாடு ஒவ்வொரு அஹ்மதியும் எல்லா நிலையிலும் இந்த போதனையை தமது சொல்லிலும் செயலிலும் வெளிப்படுத்தும் போதுதான் ஏற்படும். இவ்வசனங்களில் கூறப்பட்டுள்ள உயர் தரத்தை அடைவதற்கான முயற்சி எல்லா நிலையிலும், வீடுகளிலும், சுற்றுப்புறத்திலும், தம்முடனும், அந்நியர்களுடனும் எதிரிகளுடனும் உள்ள தொடர்புகளில் இருக்க வேண்டும். அப்போது தான் நாம் உண்மையான மூஃமினாக முடியும். அப்போது தான் இக்காலத்தின் இமாமுடன் இணைந்துள்ளோம் என்ற நமது வாதத்தில்

உண்மையாளர்களாக இருக்க முடியும். இல்லையென்றால் நமது வாதங்கள் அர்த்தமற்றதாகி விடும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நம்மைக் குறித்து, பெயரைக் கெடுத்து விடுபவர்களாக நாம் ஆகிவிடக் கூடாதே! என்ற கவலையை நாம் அதிகரிப்பவர்களாக ஆகி விடுவோம். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் இந்தக் கவலையை நாம் குறைப்பவர்களாக இருக்க வேண்டும். அந்தக் கவலையை முற்றிலும் போக்குபவர்களாக இருக்க வேண்டும். எனவே நமது எல்லா விவகாரங்களிலும் சாட்சி கூறுவது அல்லாஹ்வுக்காக இருக்க வேண்டும். சாட்சி கூறுவதால் நமக்கு ஏதாவது சுய இலாபம் கிடைக்கும் என்ற சிந்தனை ஒருபோதும் நமது உள்ளத்தில் எழக் கூடாது. மாறாக நான் இறைவனின் விருப்பத்தைப் பெற வேண்டும் என்ற சிந்தனை மட்டுமே ஏற்பட வேண்டும். மேலும் இறைவனை மகிழ்விக்க வேண்டும் என்ற சிந்தனை மட்டுமே ஏற்பட வேண்டும்.

நீதியின் எல்லா எதிர்பார்ப்புகளையும் நிறைவேற்றும் போதுதான் இதனை நாம் அடைய முடியும். சத்தியத்தில் நிலை நிற்காத வரை நீதியின் உயர் தரத்தில் நம்மால் நிலைபெற முடியாது. நீங்கள் உங்களுக்காக விரும்புவதையே பிறருக்காகவும் விரும்புங்கள் என்ற ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களின் கட்டளையைப் பேணாமல் நீதியின் உயர் தரத்தை அடைய முடியாது. நாம் நமக்காக நமது உரிமை கிடைக்க வேண்டும் என்று முயற்சி செய்கிறோம். சிறிதளவு உரிமை நமக்கு கிடைக்கா விட்டாலும் உடனே நாம் கூச்சலிடுகிறோம். ஆனால் பிறரின் உரிமையை செலுத்தும் விவகாரம் வந்தால் பல்வேறு சாக்குப்போக்குகளைக் கூறுகின்றனர். நமக்கு நீதி கிடைக்க வேண்டும் என்று வரும்போது நீதி தொடர்பான எல்லா திருக்குர்ஆன் கட்டளைகளையும் தீர்ப்பு வழங்குபவரின் முன் எடுத்து வைக்கின்றோம். மிகவும் கடினமாக உழைத்து ஹதீஸ்களைத் தேடி எடுத்து உரிமையைச் செலுத்தாமல் புறக்கணிப்பர் மற்றும் உரிமையைச் செலுத்தாமல் புறக்கணிப்பர் மற்றும் தீர்ப்பு வழங்குபவர்கள் ஆகிய இருவருக்கும் இறையச்சத்தை நினைவூட்டுகின்றோம். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் மேற்கோள்களை எடுத்துக் கூறுகின்றோம். ஆனால் நம்மிடம் நீதியில் நிலைத்து நின்றவாறு உண்மையான சாட்சி கூறுமாறு வேண்டப்பட்டால் உண்மையான சாட்சி கூறுவதற்குப் பதிலாக சத்தியத்தைக் கூறுவதற்குப் பதிலாக சிக்கலான மற்றும் தெளிவில்லாத பேச்சுக்களைப் பேசி விவகாரத்தை சீர்கெடுக்கவும் அல்லது தமக்கு சாதகமாக ஆக்கிக் கொள்வதற்கும் அல்லது தமக்கு நெருக்கமானவர் –களுக்கு சாதகமாக ஆக்கிக் கொள்வதற்கு முயற்சி செய்கின்றோம். இவை ஒரு உண்மையான மூஃமினிடம் இருக்கக் கூடாது. இறைவனின் விருப்பத்திற்கு முன்னுரிமை வழங்க வேண்டும். மற்ற எல்லாவற்றையும் அதற்குக் கீழ் கொண்டு வாருங்கள் என்பது ஓர் உண்மையான மூஃமினுக்குரிய கட்டளையாகும். தனக்கு எதிராக சாட்சி கூற நேர்ந்தாலும் அதிலிருந்து முகம் திருப்பாமல் இருக்கும் தைரியத்தை உருவாக்கினால் தான் இது நடக்கும். உண்மையைப் பேசுவதால் அல்லது உண்மையான சாட்சி கூறுவதால் நான் எந்த அளவு பிரச்சனையில் சிக்கிக் கொள்ள நேரிடும் என்பதை சற்றும் பொருட்படுத்தக் கூடாது. அல்லது எனது அன்பிற்குரிய உறுப்பினர்கள், எனது குழந்தைகள் ஆகியவர்களுக்கு எதிராக நான் சாட்சி கூறினால் எனக்கு எந்த அளவு துன்பம் ஏற்படும் அல்லது எனது பெற்றோர் அல்லது எனது பிள்ளைகள் மற்றும் உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கு எதிராக நான் கூறும் சாட்சியால் எனக்கு எந்த அளவுக்கு கஷ்டங்கள் ஏற்படும் என்பதை சற்றும் பொருட்படுத்தக் கூடாது. சத்தியத்தை எடுத்துக் கூறுவதற்காக நீதியில் நிலைத்திருப்பதற்காக நாம் நமது சுற்றுச்சூழல், நமது உறவினர்கள் மற்றும் பெரியவர்களின் கோபத்தையும் சம்பாதிக்க வேண்டியது ஏற்பட்டால் நாம் சகித்துக் கொள்வோம் என்ற சிந்தனை நம்மில் உருவாக வேண்டும்.

உங்களது செல்வம் அல்லது ஏழ்மை, உங்களது பலன் அல்லது நீங்கள் கூறும் பொய் சாட்சிகள் ஆகியவற்றின் பலன் அல்லது இழப்பு, நீதியை கைவிடுவதைச் சார்ந்ததில்லை. மாறாக அல்லாஹ்வின் அருளைச் சார்ந்ததாகும். அல்லாஹ் விரும்பினால் உங்களுக்கு பலன் தருவான். இல்லையென்றால், நீங்கள் எவ்வளவு முயற்சி செய்தாலும் உங்களால் பலனடைய முடியாது. பொய் சாட்சிகள் உங்களுக்கு பலன் அளிக்காது. ஆம்! தற்காலிகமான உலக ஆதாயம் கிடைக்கலாம். ஆனால் அல்லாஹ்வின் கோபத்தின் காரணமாக அதனால் ஏற்படும் இழப்புகள் தாங்கிக் கொள்ளும் சக்திக்கு மீறியதாக இருக்கும். எனவே அல்லாஹ்வை நண்பனாக்கிக்

கொள்ளுங்கள். அவனது நெருக்கத்தைப் பெறுங்கள். எப்போதும் நீதியின் விருப்பங்களை நிறைவேற்ற நேர்மையான மற்றும் சரியானவற்றைப் பேசுங்கள். உங்களது குடும்ப விவகாரங்களிலும், வீட்டு விவகாரங்களிலும், சமூக விவகாரங்களிலும், உலக விவகாரங்களிலும் உண்மையை எப்போதும் பற்றிப் பிடித்திருங்கள். நீதியை நிலைநாட்ட எப்போதும் முயற்சி செய்யுங்கள். உங்களது மன இச்சைகளைப் பின்பற்றி நீதி மற்றும் நேர்மையிலிருந்து விலகிச் செல்வதற்குப் பதிலாக, சுற்றி வளைத்துப் பேசி விவகாரத்தை சிக்கலாக்குவதற்குப் பதிலாக அல்லது உண்மையான சாட்சியை மறைப்பதற்குப் பதிலாக, அல்லாஹ்வை கோபப்படுத்துவதற்குப் பதிலாக எப்போதும் இறைவனின் விருப்பத்தை ஒரு மூஃமின் தன் குறிக்கோளாக ஆக்கிக் கொள்ள வேண்டும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வாழ்க்கையில் ஒரு சம்பவம் வருகிறது. நிலம் தொடர்பான ஒரு வழக்கில் அவர்கள் சாட்சி கூற வேண்டியது வந்தது. விவசாயிகளுடன் மரங்கள் தொடர்பான வழக்காக அது இருந்தது. அந்த மக்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எப்போதும் உண்மையில் நிலைத்திருந்தவாறு சாட்சி கூறுவார்கள் என்று அறிந்திருந்தார்கள். அந்த வழக்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் தந்தையாரின் நிலம் மற்றும் குடும்ப நிலத்தில் இருந்த மரங்கள் யாருக்கு சொந்தம் என்பது தொடர்பான வழக்காக அது இருந்தது. சாட்சி கூறுவதற்காக அவர்களை அழைத்ததும் நீதிபதியின் முன்னிலையில், எனது பார்வையில் இந்த மரங்கள் இந்த மக்களுக்கு சொந்தமானதாகும். இவற்றின் உரிமை இவர்களுக்கு கிடைக்க வேண்டும் என்று கூறினார்கள். இதன் காரணமாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் தந்தையும் குடும்பத்தினரும் கோபமடைந்தனர். ஆனால் நான் எதை உண்மை என்று கருதினேனோ அதையே சாட்சியாக கூறியிருக்கிறேன் என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள். இதுவே இக்காலத்தின் இமாம் நம் முன்னால் காட்டியுள்ள உயர் தரமான முன்மாதிரியாகும். இந்த தரத்தையே நாம் நம்மில் உருவாக்க வேண்டும். இந்த தரத்தை அடைவதற்கே ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் நமக்கு வலியுறுத்தியுள்ளார்கள்.

அல்லாஹ் கூறுகிறான்: *நன்றாக நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். பொய் சாட்சி கூறுவதால் நீங்கள் உலக மக்களை ஏமாற்றி விடலாம். ஆனால் இறைவனை ஏமாற்ற முடியாது.*

فَإِنَّ اللّٰهَ كَانَ بِمَا تَعْمَلُوْنَ خَبِيْرًا ﴿١٣٦﴾

*நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை நன்கு அறிந்தவன் ஆவான். அவனிடமிருந்து எதையும் மறைக்க முடியாது* என்று இறைவன் கூறுகிறான்.

நாம் சமூகத்தில் அமைதியையும், சமாதானத்தையும் பரப்ப விரும்புகிறோம் என்று ஒருபுறம் வாதம் புரிகிறோம். உண்மையில் நிலைத்திருந்து உலகிற்கு சத்தியத்திற்கான வழியைக் காட்ட விரும்புகிறோம். ஆனால் மறுபக்கம் நாம் நமது சொல்லிலும் செயலிலும் அற்பமான உலக ஆதாயத்திற்காக முரண்பாடு கொண்டவர்களாக இருந்தால், நாம் உண்மையில் நிலை பெறுபவர்களாக மாட்டோம். நீதியில் நிலை பெறுபவர்களாக மாட்டோம். அமைதி மற்றும் சமாதானத்தைப் பரப்புபவர்களாக மாட்டோம். மாறாக சமூகத்தின் குழப்பத்தில் பங்கு வகிப்பவர்களாகி விடுவோம்.

எனவே ஒரு மூஃமின் அநீதிக்கு எதிராக குரல் கொடுப்பதாகக் கூறும் வாதம் மற்றும் அநீதியைத் தடுப்பதாக செய்யும் வாதம், அவர் நீதியின் உயர் தரத்தை நிலைநாட்டும் போது தான் உண்மையாகும். சத்தியத்தின் உயர் தரத்தை நிலைநாட்ட வேண்டும். அல்லாஹ் நமது இந்த தரத்தை எந்த உயர்வான நிலையில் பார்க்க விரும்புகிறான்.

அதற்காக அல்லாஹ் சூரா மாயிதாவில் கூறுகிறான்: இந்த வசனத்தை நான் தொடக்கத்தில் ஓதினேன். அதாவது சிறிய வட்டத்தில் அமைந்திருக்கும் உங்களது சமூகத்தில் மட்டும் நீதியை நிலைநாட்டுவதற்காக உண்மையான சாட்சி சொல்வது அமைந்திருக்கக் கூடாது. மாறாக உங்களது எதிரிகள் கூட உங்களிடம் நீதியைப்

பெற விரும்பினால் அவர்களுக்கும் நீதியை வழங்குபவர்களாக இருங்கள். நீங்கள் கூறுவது சத்தியம் தான்; நீதி தான் என்று அவர்கள் உங்கள் மீது நம்பிக்கை வைக்க வேண்டும். அல்லது ஒரு மூஃமின் ஒவ்வொரு செயலையும் தக்வாவில் நிலைத்திருந்தவாறு செய்கிறார். இறைவனின் விருப்பத்தைப் பெறுவதற்காக செய்கிறார் என்று எதிரிகளுக்கு வெளிப்படுத்திக் காட்டுங்கள். யாருடைய பகைமையும் நீதியிலிருந்து நம்மை விலக்க முடியாது. நமது உள்ளங்கள் பகைமையிலிருந்து தூய்மையானதாகும். எமக்கு யாரிடமும் வெறுப்பும் பகைமையும் இல்லை என்று நாங்கள் அறிவிப்பு செய்கிறோம். ஆனால் எதிரிகளின் உள்ளத்திலுள்ள காழ்ப்புணர்ச்சி, பகைமை மற்றும் வஞ்சகம் ஆகியவை நாம் தவறாக அவர்களுக்கு இழப்பை ஏற்படுத்துவதற்காக நீதிக்குப் புறம்பான பேச்சுக்களைப் பேச நம்மைத் தூண்டாது.

இந்த அழகிய போதனையைத் தான் நாம் அந்நியர்களுக்கு முன் எடுத்து வைக்கிறோம். அவர்களுக்கு இஸ்லாத்தின் போதனைகளின் அழகை எடுத்துரைக்க முயற்சி செய்கிறோம். அவர்கள் நம் போதனைகளைக் கேட்டு இஸ்லாத்தைப் பற்றி இன்னும் அதிகமாக அறிந்து கொள்ள விரும்புகின்றனர். எனவே நமது கருத்துக்கள் உலகத்தின் கவனத்தை நம் பக்கம் ஈர்க்கிறது என்பதில் ஐயமில்லை. ஆனால் நாம் உண்மையான சாட்சி கூற வேண்டும் என்ற நமது பேச்சுக்கள், நீதியை நிலைநாட்ட வேண்டும் என்ற நமது பேச்சுக்கள், நமது சமூகத்திலிருந்து எதிர்ப்புகளைப் போக்க வேண்டும் என்ற பேச்சுக்கள், அமைதி மற்றும் சமாதானத்தைப் பரப்புதல் வேண்டும் என்ற நமது பேச்சுக்கள் உண்மையில் உலகத்தின் கவனத்தை நம் பக்கம் ஈர்க்கும் என்றால் நமது செயல்களின் நிலையும் அதற்கு ஏற்றவாறு அமைந்திருக்கும் போது தான் ஈர்க்கும் என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

அல்லாஹ் நம் மீது மாபெரும் பொறுப்பு ஒன்றை சுமத்தியுள்ளான். கவ்வாம் ஆக நிலைநில்லுங்கள் என்று கூறி பொறுப்பு சுமத்தியுள்ளான். அதாவது மிகவும் ஆழம் வரை சென்று தொடர்ச்சியாகவும், நிரந்தர மனப்பான்மையுடனும் முயற்சி செய்தவாறு நீதியை நிலைநிறுத்துங்கள். கவ்வாம் என்றால் ஆழம் வரை செல்வது என்பதாகும். எந்தவொரு பணியைச் செய்தாலும் இவ்வாறு செய்ய வேண்டும். இங்கு நீதியை நிலைநாட்ட வேண்டும் என்று கூறப்பட்டிருப்பதால், மிகவும் ஆழமாக சென்று நீதியின் எல்லா தேடல்களையும் பூர்த்தி செய்யுங்கள். அதனை தொடர்ச்சியாகவும் நிரந்தர மனப்பான்மையுடனும் நிலைநாட்ட முயற்சி செய்யுங்கள். ஆழமாக சென்று இறுதி வரை கடின உழைப்புடன் தொடர்ச்சியாக செய்யும் முயற்சியால் உலகில் நீதி நிலைபெறுவதுடன் அமைதி மற்றும் சமாதானத்தின் தூதுச் செய்தியும் கிடைக்கும்.

எனவே இன்று உலகில் நீதியை நிலைநாட்டுவதற்கும், சத்தியத்தை பரப்புவதற்கும் அமைதி மற்றும் சமாதானத்தின் உத்தரவாதமாக இருக்கும் பணியைச் செய்வதும், ஒரு தொடர் முயற்சியால் நுட்பத்திலும் நுட்பமான அம்சங்களைக் கண்முன் நிறுத்தி செயல்படுவது ஒரு மூஃமினுடைய பணியாகும். ஒரு உண்மையான அஹ்மதியின் பணியாகும். இக்காலக்கட்டத்தில் அஹ்மதிகள் தான் நாங்கள் உண்மையான முஸ்லிம் ஆவோம் என்று வாதம் புரிகின்றோம். நாங்கள் உண்மையான மூஃமின் என்று வாதம் புரிகின்றோம். ஏனெனில் நாம் காலத்தின் இமாமை ஏற்றுக் கொண்டுள்ளோம். ஏனெனில் நாம் இஸ்லாத்தின் உண்மையான போதனையை அறிந்திருக்கிறோம். காலத்தின் இமாமை ஏற்றுக் கொண்டு அல்லாஹ்வின் கட்டளைகளின் அறிவையும் ஞானத்தையும் வெறும் விருப்பத்தின் அடிப்படையிலோ அல்லது அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்பதாலோ நாம் இதை அறியவில்லை. மாறாக இந்த கட்டளைகளின்படி செயல்பட்டு செயல்பூர்வமான முன்மாதிரியை நிலைநாட்டவும் நாம் முயற்சி செய்கிறோம்.

நான் முன்னதாக கூறியது போன்று எந்த அளவுக்கு நாம் நீதியில் நிலைத்திருக்கிறோம்? எந்த அளவுக்கு நாம் உண்மையில் நிலைத்திருக்கிறோம்? என்று நாம் நம்மை ஆய்வு செய்து பார்க்க வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தமக்கும் தமது தந்தையாருக்கும் எதிராக உண்மையான சாட்சியை கூறினார்கள். உலக ஆதாயத்திற்கு அவர்கள் முக்கியத்துவம் கொடுக்கவில்லை. இன்று நாம் அவர்களைச் சார்ந்தவர்கள் என்று

வாதம் புரிந்து இந்த தரத்தை அடைய முயற்சி செய்கிறோமா? இல்லையா? என்று பார்க்க வேண்டும். நாம் உண்மையில் இந்த தரத்தை அடைய முயற்சி செய்தால் பிறகு சிந்திக்க வேண்டிய விசயம் என்னவென்றால்,

நமது வீடுகளில் நம்பிக்கையில்லாத நிலை ஏன் உள்ளது? நம்பிக்கையில்லாத நிலை உள்ள வீட்டில் நீங்கள் உங்களையே ஆய்வு செய்து பாருங்கள். கணவன் மனைவிக்குரிய தொடர்பில் ஏன் அன்பும் நேசமும் தென்படவில்லை? இதனால் குழந்தைகள் ஏன் துன்பத்திற்குள்ளாகி இருக்கின்றனர்? சகோதரர்களுக்குரிய உறவுகளில் ஏன் விரிசல்கள் ஏற்படுகின்றன? தப்பெண்ணங்களின் காரணமாக அல்லது சத்தியத்தின் குறைவின் காணரமாக பரஸ்பரம் உள்ள தொடர்புகள் ஏன் முறிகின்றன? நட்புறவின் அடிப்படையில் தொடங்கப்பட்ட வியாபாரங்கள் வெறுப்புகள் மற்றும் வழக்குகளாக ஏன் மாறுகின்றன? கஸாவில் வழக்கு எண்ணிக்கை ஏன் அதிகரித்துக் கொண்டிருக்கிறது? அஹ்மதிகளின் சார்பாகவும் நீதிமன்றங்களுக்கு ஏன் வழக்குகள் செல்கின்றன?

உள்ளத்தின் நிலை மற்றும் சொல் மற்றும் செயலில் முரண்பாடு உள்ளது என்பது வெளிப்படையான உண்மை. தமக்காக வேறு தரமும் பிறருக்காக வேறு தரமும் ஆகிவிட்டது. எனவே ஒவ்வொரு அஹ்மதியும் இது தொடர்பாக கவலைப்பட வேண்டும். அவர் ஜமாஅத்தின் தொண்டிற்காக பணிக்கப்பட்டுள்ள பொறுப்பாளராக இருந்தாலும் சரி அல்லது சாதாரண அஹ்மதியாக இருந்தாலும் சரி உலகிற்கு நீதியை வழங்குவதும் உண்மையைப் பரப்புவதும் ஆகிய பெரிய பணி நம் முன் இருக்கிறது. இந்தப் பணியை நாம் நம்மை சீர்திருத்தியவாறு எவ்வாறு வெற்றிகரமாக செய்ய முடியும். இதனால் இறைவனின் விருப்பத்தை நாம் பெற வேண்டும். அல்லாஹ்வின் வாக்குறுதிக்கேற்ப அவனது மன்னிப்பு எனும் போர்வையில் நாம் வரக்கூடியவர்களாக ஆக வேண்டும். இதனால் நாம் அல்லாஹ்விடம் நற்கூலியைப் பெறுபவர்களாக வேண்டும். இதற்காக நாம் நிச்சயமாக இறைவனின் கட்டளைகளின் பால் கவனம் செலுத்த வேண்டும். அதன்படி செயல்பட முயற்சி செய்ய வேண்டும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இறைவனின் பாதுகாப்பைப் போன்று வேறு எந்த பாதுகாப்பான அரணும் இல்லை. ஆனால் அரை குறையான வேலை பலன் தர முடியாது. தாகம் எடுக்கும் போது ஒரு சொட்டுத் தண்ணீர் குடிப்பது போதுமானது என்று யாரும் கூற முடியமா? அல்லது அதிகமாக பசி எடுக்கும் போது ஒரு பருக்கை சோறு அல்லது ஒரு வாய் சோறு சாப்பிடுவதால் வயிறு நிரம்பி விடுமா? ஒருபோதும் இல்லை. மாறாக, முழு திருப்தியுடன் தண்ணீர் குடிக்காத வரை அல்லது உணவு உண்ணாத வரை நிம்மதி ஏற்படாது. அவ்வாறே செயல்களில் முழுமைத்தன்மை ஏற்படாத வரை கிடைக்க வேண்டிய பலனும் விளைவும் கிடைக்காது. அரைகுறை செயல்கள் அல்லாஹ்வை மகிழ்விக்க முடியாது. அவை அருளுக்குரியதாகவும் இருக்க முடியாது. எனது விருப்பத்தின் படி செயல்படுங்கள். அப்போது தான் நான் பரக்கத்தை வழங்குவேன் என்பது அல்லாஹ்வின் வாக்குறுதியாகும்.

உலகிற்கு அமைதி மற்றும் சமாதானத்தின் தூதுச் செய்தியை எட்ட வைக்க வேண்டும் என்ற பொறுப்பை அல்லாஹ் நம் மீது சுமத்தியுள்ளான். அதற்காக எல்லா நிலையிலும் நாம் நீதியை நிலைநாட்டுவது அவசியமாகும். உண்மையை நிலைநாட்டுவது அவசியமாகும். அல்லாஹ்வின் கட்டளைகளை ஆழம் வரை சென்று அறிவதாலும் செயல்படுவதாலும் மட்டுமே நீதி நிலைபெற முடியும். இறைவனுக்கு செலுத்த வேண்டிய உரிமைகளை செலுத்துவதையும் ஆழம் வரை சென்று அறிந்து அதன்படி செயல்படுவதும் அவசியமாகும். இறை படைப்பினங்களின் உரிமைகளைச் செலுத்துவதிலும் அல்லாஹ்வின் எல்லா கட்டளைகளையும் ஆழம் வரை சென்று அறிந்து அதன்படி செயல்படுவது அவசியமாகும். அல்லாஹ்தஆலா நமக்கு இதற்கான நல்வாய்ப்பை நல்குவானாக! இதனால் நாம் நமது வீடுகளையும் நமது சமூகத்தையும் நீதியை நிலைநாட்டியவாறு சொர்க்கத்தின் முன்மாதிரியாக ஆக்குவதுடன் இஸ்லாத்தின் அழகிய போதனைகளின் ஒளியில் தப்லீகிற்குரிய அழகிய போதனைகளின் ஒளியில் தப்லீகிற்குரிய உரிமையை செலுத்துபவர்களாக நாம் இருக்க வேண்டும். உலகிற்கு உண்மையான நீதியின் போதனையை எடுத்துக் கூறி அழிவின் குழியில் வீழ்வதிலிருந்து காப்பாற்றுபவர்களாக

நாம் ஆக வேண்டும். மிகவும் அபாயகரமான அழிவின் பால் உலகம் மிகவும் விரைவாக சென்று கொண்டிருக்கிறது. முஸ்லிம்களிடமும் நீதி இல்லை. முஸ்லிம் அல்லாதவர்களிடமும் நீதி இல்லை. நீதி இல்லை என்பது மட்டுமல்லாமல் அநீதியின் உச்சத்தை தொட்டு விடுகின்றனர். இப்படிப்பட்ட நேரத்தில் உலகின் கண்களைத் திறந்து அநீதியிலிருந்து விலகுவதன் பக்கம் கவனமூட்டி அழிவின் குழியில் விழுவதிலிருந்து காப்பாற்றும் பணியை அஹ்மதிய்யா ஜமாஅத் மட்டுமே செய்ய முடியும். இதற்காக நாம் நம்மில் ஒவ்வொருவரும் தத்தமது வட்டத்தில் முயற்சி செய்ய வேண்டும். ஆக்கப்பூர்வமான முயற்சியுடன் நாம் துஆவின் பக்கமும் அதிகமாக கவனம் செலுத்துவது அவசியமாகும்.

முஸ்லிம் நாடுகள் செய்கின்ற அநீதிகள் மற்றும் அவர்கள் செய்த செயல்களின் தீய விளைவுகள் உள்நாட்டுக் குழப்பத்தில் அவர்களை மூழ்கடித்துள்ள அதே வேளையில் வெளியிலிருந்தும் ஆபத்துகள் மிகவும் விரைவாக அவர்களை சூழ்ந்து கொண்டிருக்கிறது. இன்னும் சொல்வதென்றால் அவர்களின் வாசல் வரை வந்து விட்டன. வெளிப்படையாக பார்க்கும் போது பெரிய போர் வாயைப் பிளந்து கொண்டு நிற்பது தெரிகிறது. உலகம் அதன் விளைவுகளை அறியாமல் இல்லை என்றபோதிலும் கவனமற்று இருக்கிறது என்று நிச்சயம் சொல்ல முடியும். இப்படிப்பட்ட நேரத்தில் முஹ்மதிய்ய மஸீஹின் அடிமைகள் தமது கடமையைச் செய்தவாறு உலகை அழிவிலிருந்து பாதுகாப்பதற்காக துஆக்களின் உரிமையைச் செலுத்த அதிகமாக கவனம் செலுத்த வேண்டும். இதற்குரிய உரிமையை நிறைவேற்றுபவர்களாக அல்லாஹ்தஆலா நம்மை ஆக்குவானாக! அவனே உலகை அழிவிலிருந்து காப்பானாக!

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**

**HAZRATH KHALIFATUL MASIH V**

at BAIT-UL-FUTUH MOSQUE, London.

on **26.04.2013**

Translated by : Maulavi S. ABDUL QADIR

Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456